புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஆகஸ்ட் 22, 2024 • புரட்சி 24 • முழக்கம் 32 • விலை ரூ.3.00

# முருகனை சு-பிராமணனிடம் இருந்து உலக மாநாடு மீட்டெடுக்குமா?

**விடுதலை இராசேந்திரன்**

தமிழ்நாடு முதல்வர் உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தி தமிழகத்தின் தொழில் கட்டமைப்புகளை வளர்க்கத் துடிக்கிறார். ஆனால் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முருகனுக்கு 'உலக மாநாடு' நடத்த முனைப்புக் காட்டுகிறார். கோயில் நிர்வாகப் பணிகளில் கவனம் செலுத்த வேண்டிய அறநிலையத்துறை முருக பக்தியை மக்களிடம் பரப்புவதில் ஏன் இப்படி முனைப்புக் காட்ட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

'திராவிட மாடல்' ஆட்சி இந்து விரோதமானது என்ற பார்ப்பனியப் பரப்புரைகளை முறியடித்து அமைச்சர் சேகர்பாபு நடத்திவரும் கோயில் திருப்பணிகளே இதற்கு சரியான பதிலாக இருக்கும் போது இப்போது ஏன் இந்த மாநாடு? என்ற கேள்வியுடன் இந்த மாநாட்டை பரிசீலிப்போம்.

தமிழ்க் கடவுள் என்று போற்றப்படும் முருகன் ஆகமப் பிடிக்குள் தான் சிக்கியிருக்கிறான். அன்றாடம் வேத மந்திரங்கள், அபிஷேகம், அர்ச்சனை, கும்பாபிஷேகம் என்று வேத சடங்குகள் நடத்தப்படுகின்றன. ஆகமப் பிடிக்குள் இருந்து ஆராய்ச்சிக் கருத்தரங்கிற்குள் முருகன் கொண்டுவரப்பட்டிருப்பதைக்கூட ஒரு வகையில் ஆகம எதிர்ப்பு தான் என்று கூற வேண்டி இருக்கிறது.

## குறிஞ்சி நிலத் தலைவன் முருகன்

பார்ப்பனியம் தான் முருகனை சுப்பிரமணியனாக (சு-பிராமணன், அதாவது சுத்தமான பிராமணனாக) அடையாள மாற்றம் செய்தது என்பதற்கு தமிழ் அறிஞர்கள் ஏராளமானச் சான்றுகளை வழங்குகிறார்கள். இலக்கிய மேற்கோள்களை எடுத்துக்காட்டுகிறார்கள். திராவிடக் கடவுள்களைப் பார்ப்பனர்கள் வைதீகக் கடவுள்களாக மதமாற்றம் செய்தார்கள் என்கிறார் ஆய்வாளர் மயிலை சீனி வெங்கடசாமி. இது பற்றி தமிழ் ஆய்வாளர்கள் என்ன கூறுகிறார்கள்?

மலையும் மலை சார்ந்த பகுதியும் தான் குறிஞ்சி. அந்த நிலத்தின் தலைவனாக இருந்தவன் தான் முருகன். அவன் கடவுளே அல்ல தமிழர்களின் நடுகல் வைத்து வணங்கும் மரபு வழியில் வாழ்ந்து மறைந்த முன்னோர்கள் வரிசையில் வணங்கப்பட்ட ஒரு தலைவன். ஆதிக்குடி தமிழ் நிலத்தின் தொன்மம்.

முருகன் கையில் உள்ள வேல் வேட்டுவர்களின் வேட்டையாடும் கருவி. முருகனோடு அடையாளப்படுத்தப்படும் மயில் குறிஞ்சி நிலப்பறவை. மயில் மேல் மனிதன் அமர்ந்தால் அது சுமை தாங்காது, மடிந்துவிடும். அதிக தூரம் அந்த பறவையால் பறக்கவும் முடியாது. ஆனாலும் அது குறியீடாக முருகனுடன் இணைக்கப்பட்டது. செங்குத்தான மலைகளில் சுமைகளைத் தாங்கிச் செல்ல முடியாது என்பதால் நீண்டக் கம்புகளின் இரு முனைகளிலும் சுமைகளைக் கட்டித் தோளில் காவடிப் போல் தூக்கிச் சென்றனர் குறிஞ்சி நில மலைவாழ் மக்கள். எனவே முருகனோடு காவடி இணைந்தது.

குறிஞ்சித்திணையின் கருப்பொருளாக இருந்தவைகள் முருகனின் அடையாளங்களாக மாற்றப்பட்டன.

மக்கள் ஒன்று சேர்ந்து நடுகல் தலைவன் முருகனுக்கு ஆடிப்பாடி இயற்கை வழிபாடுகளையே நடத்தி வந்தனர். அதனால் தான் முருகன் கோட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது. முருகன் நடுகல்லை யார் வேண்டுமானாலும் தொட்டு வணங்கலாம். கர்பக் கிரகமோ, ஆகமமோ, அர்ச்சனைகளோ அங்கே கிடையாது. இது தமிழ் ஆய்வாளர்கள் முன்வைக்கும் கருத்து.

## முருகன் என்ற பெயரை சூட்ட பார்ப்பனர்கள் தயங்குவது ஏன்?

எந்தவொருப் பார்ப்பனனும் முருகன் என்று பெயர் சூட்டிக்கொள்வதில்லை. சுப்பிரமணியன் என்றே பெயர் சூட்டிக்கொள்கிறார்கள். சரி, முருகன் என்ற தமிழ் மூதாதை எப்படி சு-பிராமணனாக, சுப்பிரமணியன் என்ற வைதீகக் கடவுளாக மாற்றப்பட்டான்?

பவுத்தமும், சமணமும் வேதப் பார்ப்பனியத்தை எதிர்த்தது. திராவிடத்தில் செல்வாக்கோடு வளர்ந்தன, வைதீகமோ வலுவிழந்தது. இந்தச் சவாலை சந்திப்பதற்காகப் பார்ப்பனியம் சதித் திட்டம் ஒன்றைத் தீட்டியது. தமிழர்களின் நடுகல் வழிப்பாட்டை வேத மதத்திற்குள் உள்ளிழுப்பதற்காகப் புராணக் கட்டுக்கதைகளை உருவாக்கினார்கள். 6 கை, 12 தலை, 18 கண் என்று முருகனின் உருவத்தையே மாற்றினார்கள். செயற்கை நுண்ணறிவு இல்லாதப் புராணக்காலத்திலேயே இப்படி நடந்துள்ளது.

அடுத்ததாக சிவனுக்கும் - பார்வதிக்கும் பிறந்தவன் தான் முருகன் என்று பிறப்புச் சான்றிதழையே தயாரித்தார்கள். அந்தப் பிறப்புக்கு மக்களின் மூடத்தனத்தைப் பயன்படுத்தினார்கள். வரலாறுகளைக் கற்பிதங்களோடு (Fantasy) இணைக்கும் இன்றையத் திரைப்படங்களின் முன்னோடிகளே இவர்கள் என்று கூறலாம்.

முருகன், சிவனுக்கும் - பார்வதிக்கும் பிறந்தவன். சிவனின் நெற்றியில் மூன்றாவது கண் ஒன்று இருந்தது. அது சுட்டெரிக்கும் சக்திக் கொண்டது. இந்தக் கண்ணில் இருந்து 6 விந்துத்துளிகள் நெருப்பு என்ற அக்னி பகவான் மீது விழுந்தது. அந்த விந்துக்கள் நெருப்பில் பொசுங்கிவிடாமல் தடுப்பதற்காக விந்துவை வாய் மூலமாக விழுங்கிக் கொண்டான் அக்னி பகவான். விழுங்கிய விந்துவை தர்ப்பைப்புல் நிறைந்த 'சரவணக்' காட்டுக்குள் சென்றுத் துப்பினான். அப்போது 6 குழந்தைகள் பிறந்தன. பிறகு 6 குழந்தைகளும் ஒரே குழந்தையாக உருவெடுத்தது. அவன் தான் 'ஸ்கந்தன்'

குறிஞ்சி நிலத்தலைவன் ஸ்கந்தனாக சமஸ்கிருதமயமாக்கப்பட்ட பிறகு நடந்தது என்ன? ரஜினியும் விஜய்யும் பழிவாங்க நடத்தும் இரத்தக்கறை சினிமாக் காட்சிகளைப் போலக் கதைகளை உருவாக்கினார்கள். தேவ - அசுரப் போரில் பார்ப்பனியத்தை எதிர்த்த அசுரர்களைப் போல முருகன் இவர்களால் களமிறக்கப்பட்டான்.

சூர பத்மன் என்ற பார்ப்பனிய எதிர்ப்பு அசுரனை முருகன் 'சம்ஹாரம்' செய்தான். சூர பத்மன் பிராமணர்களை மதிக்க மறுத்தான் என்பது குற்றச்சாட்டு. முருகன் சூரபத்மனை இரண்டாக பிளந்தான். அதன் ஒரு பகுதி மயில் ஆனது, மறு பகுதி சேவல் ஆனது. உயர்திணை மனிதனை அஃறிணை பறவைகளாக்கி அவமதிக்கும் இந்தக் கொலைத் திருவிழா இப்போது 'சூர சம்ஹாரம்' என்ற பெயரில் திருச்செந்தூரில் அரங்கேற்றப்படுகிறது. இந்தக் கொலைக் களத்திற்கு சட்டம் அனுமதி தருகிறது. அழிந்தது சூரபத்மன் மட்டும் தானா? ஏமஊடம் என்ற ஊரில் வாழ்ந்த அசுரர்கள், அவர்களின் குழந்தைகள் அனைவரையும் கடலில் மூழ்கடித்து சாகடிக்கப்பட்டனர்.

வயநாடு நிலச்சரிவைப் போல அன்று பார்ப்பனர்கள் அரங்கேற்றிய கடல் மூழ்கடிப்பு அது. இந்தக் கொடூரத்தை கொண்டாட்டமாக்கியது தான் மிகப்பெரும் கொடுமை. நரகாசூரன் கொலையைத் தீபாவளியாகவும், பத்மாசூரன் மற்றும் அசுரர்கள் கொலையை சூரசம்ஹாரமாகவும் கொண்டாடுவதை ஒரு நாகரீகமான சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமா?

## அடையாள மாற்றம் செய்யப்பட்ட முருகன்

உருமாற்றம் - மதமாற்றம் - பெயர் மாற்றத்துடன் இதை விட்டார்களா என்றால் இல்லை. குடும்பத்தின் அடையாளங்களையும் அவர்கள் சிதைத்தார்கள். 'வள்ளி' என்ற ஒரு மனைவியுடன் இருந்த முருகனுக்கு 'தெய்வானை' என்ற இன்னொருப் பெண்ணையும் மனைவியாக்கினார்கள்.

திருத்தணி - பழனி - நாஞ்சில் குமரக் கோயில் - சுவாமிமலை என்று முருகனுக்கு ஆறுபடை வீடுகள் வரிசைப்படுத்தப்பட்டன. ஆறுபடை என்பது எண்ணிக்கையைக் குறிப்பதல்ல, அது 'மனதை ஆற்றுப்படுத்த தலைவனை நோக்கிச் செல்லல்' என்பதே பொருள் என்கிறார்கள் தமிழ் ஆய்வாளர்கள். ஆறுபடைக்கு 6 என்ற எண்ணிக்கையாகத் திரித்து, 6 ஊர்களை முருகனின் வழிபாட்டுத் தலங்களாக மாற்றினார்கள். இன்னும் சொல்லப்போனால் அந்த ஊர்களில் திருத்தணி மற்றும் பழமுதிர்ச் சோலை ஆகியவை செயற்கையாக இணைக்கப்பட்டவையாகும். குன்றுகள் தோறும், பழமுதிர் சோலைகள் தோறும் முருகன் இருப்பான் என்ற பொதுவான கருத்தை உருவாக்கி நான்கு படை வீடுகளை ஆறுபடையாக மாற்றினார்கள். இப்படித்தான் முருகன், ஸ்கந்தனாக, சுப்பிரமணியனாக ஆள்மாறாட்ட மோசடிகளுக்கு உள்ளாகி கடவுளாக்கப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. பழமுதிர்ச் சோலையில் முருகனுக்கு ஆடு வெட்டி வழிபாடு நடந்தது என்று நக்கீரரே பாடுகிறார்.

சுப்பிரமணியனிடம் இருந்து முருகனை மீட்டெடுக்க இந்த மாநாடு நடத்தப்படுகிறதா? கருவறை முதல் உச்சநீதிமன்றம் வரையில் பாதுகாப்புகளைக் கொண்டிருக்கும் ஆகமங்களை உடைத்து இந்த மீட்டெடுப்பை வெற்றிபெறச் செய்ய முடியுமா?

மீட்டெடுத்தாலும் வைதீகத்தில் மூழ்கடிக்கப் பட்ட முருகனை வைதீக எதிர்ப்புக்கு இழுத்துவர முடியுமா? எனவேதான் பெரியார் 'தமிழ் அடையாள மீட்பு முயற்சிகளால் மக்களிடம் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது' என்றக் கருத்தில் உறுதியாக இருந்து அத்தகைய முயற்சிகளை முற்றாகத் தவிர்த்தார்.

### பெரியார் கூறுகிறார்..

**"பழந்தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது மனித சமூகம் இல்லை. பழந்தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை. மனிதன் காலத்தோடு மாறுதலோடு செல்ல வேண்டியவனே ஒழிய வேறில்லை. வேண்டுமானால் மடையர்களைத் தட்டி எழுப்ப ஒரு ஆயுதமாக அதைக் கொள்ளலாம். ஆனால் சாது மக்களை ஏமாற்ற அதைப் பயன்படுத்தவிடக்கூடாது" - பெரியார் (குடிஅரசு 10.09.1943)**

உலக மாநாட்டிற்கு விமானம் ஏறி உலக நாடுகளில் இருந்து முருக பக்தித் தமிழர்கள் வருகிறார்கள். அவர்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைப்பார்களா?

1. தமிழ் முருகனிடம் தமிழ் வழிபாடு மட்டுமே நடத்த வேண்டும்.

2. பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் மட்டுமே வழிபாடு நடத்த வேண்டும்.

3. ஒரு காலத்தில் தமிழ் பண்டாரங்கள் மட்டுமே வழிபாடு நடத்திவந்த பழனிக் கோயில், 'திருமலை நாயக்கன்' ஆட்சிக் காலத்தில் அவர்களிடம் இருந்து வழிபாட்டு உரிமைப் பறிக்கப்பட்டு பார்ப்பனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திருமலை நாயக்கனின் தளபதி இதற்கான உத்தரவை பிறப்பித்தான்.

500 ஆண்டுகால பாப்ரி மசூதியை இடித்தார்கள். இராமன் பிறந்த இடம் என்று கூறி ஆதாரங்கள் ஏதும் இல்லாமலேயே உச்சநீதிமன்ற தீர்ப்பைப் பெற்று கோயிலையும் கட்டிவிட்டார்கள். ஆனால் பழனி முருகன் கோயில் ஆகமக் கோயில் அல்ல, சித்தர்களின் கோயில். அங்கே பண்டாரங்கள் தான் அர்ச்சகர்கள் என்ற சான்றுகள் இருந்தும் ஏன் மீண்டும் பண்டாரங்களிடம் அர்ச்சகர் உரிமையை வழங்கக்கூடாது?

உலக முருகன் மாநாட்டு நினைவாக அர்ச்சகர் பயிற்சிப் பெற்றுப் பணிக்காகப் பல ஆண்டுகளாக வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட தமிழர்களுக்கு முழுமையாக அர்ச்சகர்ப் பணிக்கான நியமனங்களாவது செய்யப்படுமா?

இந்தக் கோரிக்கைகளை உலக முருகன் மாநாடு பரிசீலிக்குமா?

## தலையங்கம்

# பதுங்கும் பாஜக!

மூன்று வேளாண் சட்டங்களில் ஒரு புள்ளி, கமாவை கூட அழிக்க மாட்டோம் என்று கடந்த காலங்களில் ஆணவமாகப் பேசிய ஒன்றிய பாஜக அரசு, இனி அப்படியெல்லாம் ஆணவமாகப் பேச முடியாது என்று உணரவைக்கத்தக்க சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வக்பு வாரிய திருத்த மசோதாவை நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பி வைத்த கையோடு, ஒன்றிய அரசின் துறைகளில் உயர் பதவிகளுக்கு தனியார் துறை ஆட்களை நியமிக்கும் மோசமான முடிவை கைவிட்டிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு.

ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்களில் இணைச் செயலாளர்கள், இயக்குநர்கள் பொறுப்புக்கு 45 பேரை நேரடித் தேர்வு (Lateral entry) செய்யவிருப்பதாகக் கடந்த வாரத்தில் அறிவிப்பு வெளியானது. ஒன்றிய அரசின் உயர் பொறுப்புகள் அனைத்தும் ஏற்கனவே பார்ப்பனமயமாக இருக்கின்றன. நாடாளுமன்றத்தில் 2022-இல் அளிக்கப்பட்ட விவரங்களின்படி, ஒன்றிய அரசின் அமைச்சகங்களின் பல்வேறு பொறுப்புகளை வகிக்கும் 322 பேரில் 254 பேர் பார்ப்பனர்கள் மற்றும் உயர்ஜாதியினர். நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் இடத்தில் கூட பிற்படுத்தப்பட்ட, பட்டியல், பழங்குடி சமூகத்தினர் இல்லை என்று சமீபத்தில் நாடாளுமன்றத்திலேயே ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார். அடுத்த ஒரு சில வாரத்திலேயே மீண்டும் இப்படியொரு அறிவிப்பை யு.பி.எஸ்.சி வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஏற்கெனவே உத்தரப் பிரதேசம், அரியானா போன்ற மாநிலங்களில் உயர் பதவிகளை ஆர்.எஸ்.எஸ்-ஸை சேர்ந்தவர்கள் கொண்டு நிரப்புவதாக சர்ச்சை எழுந்தது. இப்போது ஒன்றிய அரசின் உயர் பதவிகளிலும் தனியார் நிபுணர்களை அமர்த்தலாம் என்றால், யார் அந்த நிபுணர்களாக இருப்பார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். பொதுவாக இத்தகைய உயர் பொறுப்புகளில் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளே நியமிக்கப்படுவர். எனவே ஏர் இந்தியாவைப் போல, எல்.ஐ.சி.-யைப் போல ஐ.ஏ.எஸ். பதவிகளையும் தனியார்மயமாக்குவது என்ற சதித்திட்டம்தான் இதற்குள் ஒளிந்திருக்கிறது. இந்த 45 இடங்களில் 22 பேரை இடஒதுக்கீட்டின் அடிப்படையில் எடுத்திருக்க வேண்டும். சமூகத்தின் பல்வேறு பின்புலத்தில் இருந்து இந்த 22 பேரும் வருவதற்கான வாய்ப்புகள் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் இருக்கின்றன. அதை விரும்பாத பாஜகவின் இந்துத்துவ மனநிலைதான் யு.பி.எஸ்.சி-யின் அறிவிப்பாக இருக்கிறது.

ஆனால் பலமான எதிர்க்கட்சிகள் இப்போது அமைந்திருப்பதால், எதிர்க்கட்சிகளின் அழுத்தத்திற்குப் பணிந்து தற்காலிகமாக பின்வாங்கியிருக்கிறது ஒன்றிய அரசு. இந்த நேரடி நியமன முறை திடீரென யு.பி.எஸ்.சி அறிவித்ததல்ல. சமூக நீதியைப் படுகுழியில் தள்ளுவதற்கான பாஜகவின் நீண்டகால செயல்திட்டங்களில் இதுவும் ஒன்று. 2018ஆம் ஆண்டிலேயே இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. பிரதமரின் அறிவுறுத்தலின்படி 10 அமைச்சகங்களில் 50 இணைச் செயலாளர்கள், இயக்குநர்களை நேரடி நியமனம் செய்ய வேண்டுமென்று ஒன்றிய பணியாளர் மற்றும் பயிற்சித் துறைக்கு (DoPT) 2018ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அறிவுறுத்தப்பட்டது. அடுத்த 2 நாட்களில், இதுதொடர்பாக அதன் இடஒதுக்கீட்டுப் பிரிவிடம் ஒன்றிய பணியாளர் மற்றும் பயிற்சித் துறை கருத்துக்கேட்டது. இதுதொடர்பாக 1967 மற்றும் 1978ஆம் ஆண்டுகளில் DoPT-க்கு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, “பிரதிநிதித்துவம் அல்லது இடமாற்றம் மூலம் நிரப்பப்பட்ட காலியிடங்களில் SC/ST களுக்கு இடஒதுக்கீடு இல்லை என்றும், ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படும் பதவிகளுக்கு இடஒதுக்கீடு குறித்த அறிவுறுத்தல்கள் எதுவும் இல்லை” என்றும் DoPT-இன் இடஒதுக்கீட்டு பிரிவு 2018 ஏப்ரலில் பதிலளித்துள்ளது.

மீண்டும் மே மாதத்திலேயே DoPT அதிகாரிகளுடன் பிரதமரும் ஆலோசனை நடத்தினார். அந்த பின்னணியில்தான் இப்போது அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஆனால் இந்த அறிவிப்பை யு.பி.எஸ்.சி. ஏதோ தன்னிச்சையாக வெளியிட்டது போல மோடி அரசு நாடகமாடுகிறது. மோடி அரசின் இந்த நாடகத்தை எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, பாஜக கூட்டணியில் அங்கம் வகிக்கும் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம், ராம் விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி கட்சிகளும் உணர்ந்துகொண்டு கடுமையாக எதிர்த்திருக்கின்றன. அதன்பிறகு வேறு வழியில்லாமல் பின்வாங்கியிருக்கிறது பாஜக அரசு. இதுபோல தனியார் துறை சார்ந்த நபர்களை, அரசு சார்ந்த உயர் பொறுப்புகளில் அமர்த்துவதால் ஏற்படும் ஆபத்துகளுக்கு பங்குச்சந்தை ஒழுங்குமுறை வாரியம் (செபி) சிறந்த எடுத்துக்காட்டு.

தற்போது செபியின் தலைவராக இருக்கும் மதாபி பூரி புச் இதுபோல நேரடி நியமனம் செய்யப்பட்டவரே. அதானி குழுமம் மீது ஹிண்டன்பர்க் வைத்த குற்றச்சாட்டுக்களை நிராகரித்து செபி அறிக்கை கொடுத்தது இவரது நியமனத்திற்குப் பிறகே. இவரது கணவர் அதானி குழுமத்துடன் தொடர்புடைய சில நிறுவனங்களில் முதலீடு செய்திருப்பதாக மீண்டும் ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியிட்டது. ஆக, ஒன்றிய அரசின் உயர் பொறுப்புகளில் தனியாரையோ அல்லது ஆர்.எஸ்.எஸ் பின்புலம் சார்ந்தவர்களையோ அமர்த்துவதால் அவரவர் நிறுவனத்திற்கும், கொள்கைகளுக்கும்தான் பயன்படும். அரசுக்கும், பிற்படுத்தப்பட்ட- பட்டியல் - பழங்குடி சமூகங்களுக்கும் பெருங்கேட்டையே விளைவிக்கும். ஜனநாயக சக்திகளான நாம் எச்சரிக்கையோடு இருப்போம்.

# வினா விடை - ஆளுநர் ஸ்பெஷல்

1. ஞானத்தைக் கற்றுத்தரும் மொழி சமஸ்கிருதம் - ஆளுநர் ரவி

ரவி சார். அப்போ நீங்கதான் கட்டாயம் சமஸ்கிருதத்தைப் படிக்க வேண்டும்.

2. சமஸ்கிருத மொழியைக் கற்றுத்தருகிறவர்கள் நாட்டுக்கு சிறந்த சேவையை ஆற்றி வருகின்றனர். - ஆளுநர் ரவி

அப்படியா! கட்டடம் கட்டுகிறார்களா? நெசவு செய்கிறார்களா? தெருவைக் கூட்டுகிறார்களா?

3. ரிஷிகள் தான் நமக்கு வெளிச்சம், ஒளி என்றப் பரிசைத் தந்தார்கள் - ஆளுநர் ரவி

அப்போ மின்சாரத்தைக் கண்டுபிடித்தது எடிசன் இல்லை, ரிஷிகள் தான் என்று சொல்றீங்க!

4. நாம் அனைவரும் பாரத மண்ணில் ஒரே குடும்பமாகத்தான் வாழ்கிறோம் - ஆளுநர் ரவி

ஆனால் திராவிட மாடல் ஆட்சி மட்டும் எங்கக் குடும்பம் இல்ல. அதை ஒழித்துக் கட்டனும்.

5. பாரதத்தின் தாயாக சமஸ்கிருதம் விளங்குகிறது - ஆளுநர் ரவி

ஆனால் அந்த தாய், தாய் மொழியாக எந்த மாநிலத்திலும் இருக்க மாட்டார்.

6. இந்தியத் தத்துவம், கலாச்சாரம் இவை இரண்டையுமே யாராலும் அழிக்க முடியாது - ஆளுநர் ரவி

இது சத்தியமான உண்மை. அப்படியொன்று இருந்தால் தானே அழிக்க முடியும்.

7. ஆங்கிலத்தைக் கொண்டுவந்து சமஸ்கிருதத்தை அழித்து விட்டார்கள் - ஆளுநர் ரவி

இல்லையென்றால் உலகம் முழுவதும் மக்கள் பேசக்கூடிய மொழியாக சமஸ்கிருதம் மட்டும் தான் இருந்திருக்கும்.

*ரவி சார் நீங்களாவது சமஸ்கிருதம் பேசக்கூடாதா?*

## கலைஞர் நூல்கள் நாட்டுடமை



தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமை யாக்கப்படுவதாக தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கலைஞர் தனது 15 வயது முதல் 15 புதினங்கள், 20 நாடகங்கள், 15 சிறுகதைகள், 210 கவிதைகளை எழுதியுள்ளார். அதனை நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலகெங்கும் வாழும் தமிழர்கள் கலைஞர் கருணாநிதியின் நூல்களை படிக்க வாய்ப்பாக அமையும் என்று கூறிய முதல்வர் ஸ்டாலின்,

கலைஞர் தனியொருவரால் வாழ்நாள் காலத்தில் இத்தனை படைப்புகளை வழங்க இயலுமா என வியப்புறும் வண்ணம் சாதனை 108 தமிழறிஞர்கள் நூல்களை நாட்டுடைமையாக்கி மரபுரிமையருக்கு ரூ.7.76 கோடி தந்தவர் கலைஞர் என்றும் கூறியிருக்கிறார்.

## அமைச்சர் மனோ தங்கராஜுடன் சந்திப்பு



*சென்னை: 18.08.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்களை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் சந்தித்து எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் தேதி இராயப்பேட்டையில் நடைபெறவுள்ள பெரியார் பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்து அழைப்பு விடுத்தோம்.*

*அவரும் நமது அழைப்பை ஏற்றுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதாக ஒப்புதல் அளித்தார். சந்திப்பில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் சூர்யா, அஜித் மற்றும் அன்னூர் விஷ்ணு உடனிருந்தனர்.*

# கடவுள் உரிமைகளைப் பறிக்கும் AI தொழில்நுட்பம்

**கோ.ஒளிவண்ணன்**



* மனித குல வரலாற்றில் மாற்றங்கள் இன்றியமையாதவை. மனிதர்களின் கண்டுபிடிப்புகளின் வரிசையில் இன்னுமொரு சிகரம் செயற்கை நுண்ணறிவு. செயற்கை நுண்ணறிவின் வருகை ஒருவித பதற்றத்தையும் அச்சத்தையும் அளிக்கிறது. மனிதர்கள் இதுவரை கண்டுபிடித்தவை, அவர்களின் கட்டுப்பாட்டில்தான் இருந்தன.

ஒரு துப்பாக்கியோ, அணுகுண்டோ அதற்குரிய விசையை இயக்கினால் மட்டுமே இயங்கும். ஆனால் செயற்கை நுண்ணறிவு, மனிதர்களிடமிருந்து எவ்வளவு விரைவாக, ஆழமாகக் கற்றுக் கொள்ள முடியுமோ கற்றுக் கொண்டு, பன்மடங்கு ஆற்றலுடன் சுயமாக இயங்கக் கூடிய வல்லமையைக் கொண்டுள்ளது.

• மாபெரும் மாற்றங்கள், எப்போதாவது ஏற்படுவதைத்தான் உலகம் கண்டுள்ளது. இப்போது ஒரு சில மணி நேரத்திலேயே புதிய கண்டுபிடிப்புகள் ‘பிரேக்கிங் நியூஸ்’ போல வெளிப்படுவதைக் காண்கிறோம். இனி வரும் உலகம் எப்படி இருக்கும் என்பதுதான் உலகெங்கும் எழுந்து கேள்வி. அது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கண்டறிவதே நம் முன்னுள்ள சவால்.

* மரபியலில் நினைத்துப் பார்க்க முடியாத விளைவுகளை செயற்கை நுண்ணறிவு உண்டாக்கும் என நம்பப்படுகிறது. CRISPR- Cas9 போன்ற மரபணு எடிட்டிங் கருவிகள் மூலம், மனிதர்களின் டிஎன்ஏவைத் துல்லியமாக மாற்ற இயலும். இது தீர்க்க முடியாத நோய்களுக்கு வழிகாண உதவும்.

உதாரணமாக, 2019க்கு முன்பு, குணப் படுத்த இயலாத சில நோய்களை இன்றைக்கு மரபணு எடிட்டிங் மூலமாகச் சரிசெய்ய முடிகிறது. நீரிழிவு, பக்கவாதம், புற்றுநோய் போன்றவற்றை முற்றிலுமாக ஒழிக்க முடியலாம். குழந்தை கருவில் இருக்கும்போதே குறைகளைச் சரி செய்ய முடியும்.

• பூமியிலிருந்து முற்றிலுமாக அழிந்துபோன உயிரினங்களின் டிஎன்ஏ மாதிரிகளைக் கொண்டு, அவற்றை மீண்டும் உருவாக்கிட ஆராய்ச்சிகள் பல நடைபெறுகின்றன. உதாரணமாக, ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்துபோன மாமத யானை (Woolly Mammoth) போன்ற பெரிய யானைகளையும், ஆரோ என்னும் காட்டு மாடுகளையும் மீண்டும் உருவாக்குவது சாத்தியமாகலாம்.

உணவுக்காக ஆடு, மாடு, கோழிகள் வளர்க்கப்பட்டு, பின் கொன்று சாப்பிட வேண்டிய அவசியம் இல்லாமல் போகலாம். ‘கல்சர்’ முறையில் உருவாக்கிக்கொள்ளலாம். முழு உயிராக அல்ல, விரும்பும் சுவையான பகுதிகளை மட்டும் உருவாக்க முடியும்.

முதலில் சிங்கப்பூரில் விற்பனைக்கு வந்த இத்தகைய உணவு இன்று அமெரிக்கா, இஸ்ரேல் முதலிய நாடுகளில் வேகமாகப்பரவிவருகிறது. இவையெல்லாம் பரவலானால் சுற்றுச்சூழல், சுகாதாரம், உணவுப் பற்றாக்குறை சார்ந்த பிரச் சினைகளுக்கு முடிவுகட்ட முடியும்.

• எல்லாவற்றையும் தாண்டி, ஆய்வகங்களில் வடிவமைக்கப்பட்ட குழந்தைகள் உருவாக்கப்படலாம். நோயற்ற, வலுவான, பேராற்றல் கொண்ட சந்ததியினர் உருவாக்கப்படக்கூடும். மதம், இனம், சாதி, மொழி, நிறம் போன்ற பாகுபாடுகளற்ற ஒற்றைத்தன்மை கொண்ட சமூகங்கள் அமையலாம். 2045க்குள் இறப்பற்ற நிலையை நோக்கி மனிதர்கள் நகர்வர் எனச் சில ஆய்வுகள் கணிக்கின்றன. இதுவரை எவை கடவுள்களின் தன்மைகளாகக் கருதப்பட்டனவோ மனிதர்கள் வசம் வந்துவிடும்.

முதலில் சிங்கப்பூரில் விற்பனைக்கு வந்த இத்தகைய உணவு இன்று அமெரிக்கா, இஸ்ரேல் முதலிய நாடுகளில் வேகமாகப் பரவிவருகிறது. இவையெல்லாம் பரவலானால் சுற்றுச்சூழல், சுகாதாரம், உணவுப் பற்றாக்குறை சார்ந்த பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட முடியும்.

• எல்லாவற்றையும் தாண்டி, ஆய்வகங்களில் வடிவமைக்கப்பட்ட குழந்தைகள் உருவாக்கப்படலாம். நோயற்ற, வலுவான, பேராற்றல் கொண்ட சந்ததியினர் உருவாக்கப்படக்கூடும். மதம், இனம், சாதி, மொழி, நிறம் போன்ற பாகுபாடுகளற்ற ஒற்றைத்தன்மை கொண்ட சமூகங்கள் அமையலாம். 2045க்குள் இறப்பற்ற நிலையை நோக்கி மனிதர்கள் நகர்வர் எனச் சில ஆய்வுகள் கணிக்கின்றன. இதுவரை எவை கடவுள்களின் தன்மை களாகக் கருதப்பட்டனவோ அவை மனிதர்கள் வசம் வந்துவிடும்.

ஆனால், இதுபோல் டிஎன்ஏவைத் திருத்துவது, ஆய்வக முயற்சிகள் ஆபத்தான விளைவுகள் ஏற்படுவதற்குச் சாத்தியமுள்ளது என்பதை மறுக்கமுடியாது. இதுபோன்ற தொழில்நுட்பங்களை யார் கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பொறுத்தே விளைவுகள் அமையும். அதிசயங்கள் நிகழும்:

• மூளையையும் கணினியையும் இணைக்கும் பிசிஐ (Brain-Computer Interface) தொழில்நுட்பத்தை நோக்கி அறிவியல் நகர்கிறது. இது முழுமையாக வெற்றியடைந்தால், மூளை அடுக்குகளில் மின்னலைகளாகத் தோன்றும் எண்ணங்களைக் கணினியில் கடத்தி, மனம் விரும்புவதை இயந்திரங்கள் வழியாகச் செயல்படுத்த முடியும். பக்கவாதம், விபத்துகளில் கை, கால் இழந்தவர்கள் இயல்புநிலைக்குத் திரும்ப இத்தொழில்நுட்பம் தற்போது உதவுகிறது.

‘இத்தனை வேலை சொன்னா எப்படி? இருக்கிறது இரண்டு கைகள்தானே’ என்று கேட்பவர்கள், கூடுதல் கைகளை உருவாக்கிக்கொள்ள அவை உடலோடு ஒட்டி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தனித்திருக்கும். வீட்டில் அடுப்பை அணை, கதைவைத் தாழ் போடு என்று அலுவலகத்தில் இருந்தே உத்தரவிடலாம்.

இந்தத் தொழில்நுட்பம் அன்றாட வாழ்க்கையை எளிமையாக்க உதவும். நாம் அணியும் துணிகளில் மின்னணுச் சாதனங்கள் இழையாக அமைந்து, உடல்நிலை அளவீடுகளான இதயத் துடிப்பு, ரத்த அழுத்தம் போன்றவை 24 நேரமும் கண்காணிக்கப்படலாம். தேவைப்பட்டால் உடனடி சிகிச்சையளிக்கலாம்.

• டோபோமின் போன்ற வேதிப்பொருள்கள் சுரப்பதன் அளவைக் கொண்டு எதிரில் இருப்பவர் என்ன மனநிலையில் இருக்கிறார் என அறிந்து கொள்ளலாம். தேவையில்லாத சண்டைகள் தவிர்க்கப் படும். நாம் அறிந்திராத மொழிகளில் பேசப்படும் விஷயங்களைப் புரிந்து கொள்ள சாதனங்கள் ஏற்கெனவே சந்தைக்கு வந்துவிட்டன.

• வகுப்பறையில், மனிதனோ, ஹியூமனாய்டோ வகுப்பு எடுக்கும்போது, மாணவர்கள் அவரவர்க்கு வேண்டிய வகையில் புரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. ஐஸ்கிரீம் பற்றி விவரிக்கும்போது, கண் முன்னே முப்பரிணாமத்தில் மட்டுமல்ல, அதன் மணம், தொட்டால் குளிர்ச்சி, நாக்கை நீட்டினால் ருசி என ஆறு பரிணாமங்களில் கற்றுணர முடியும்.

• எந்த வளர்ச்சியிலும் நன்மைகள் மட்டுமல்லாமல் பல தீமைகளும் உண்டு. அறம் சார்ந்த கேள்விகளுக்கும், மனிதத் தன்மைக்கும் செயற்கை நுண்ணறிவு உலை வைத்திடுமா என்கிற அச்சத்துக்கு இதுவரை பதில் இல்லை. என்ன பாடத்திட்டங்கள், எந்தவகையில் கற்பிப்பது போன்றவற்றுக்கு உலகின் முன்னணிக் கல்வி நிறுவனங்களே விடை தெரியாமல் திண்டாடுகின்றன.

• இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளைச் செயற்கைத் தொழில் நுட்பம் குறைத்துவிடலாம் என்ற அச்சம் பல்வேறு துறைகளில் நிலவுகிறது. இளைஞர்கள் வாழ்நாள் முழுவதும் கல்வி, மாற்றங்களை எதிர்கொள்ளுதல், ஒன்றில் மட்டும் நிபுணத்துவம் பெறுவது என்றில் லாமல் பல திறன்களைக் கற்றல் எனத் தங்களைப் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் இதுவரை நாம் நினைத்துப் பார்க்காத புதியதொரு உலகை முன்வைக்கப்போகிறது என்பது மட்டும் நிச்சயம்.

**நன்றி: இந்து தமிழ் திசை (15.08.2024)**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# எழுச்சியுடன் நடைபெற்ற மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டங்கள்; கழகத் தலைவர் பங்கேற்று சிறப்புரை

**ஈரோடு தெற்கு:** திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஈரோடு தெற்கு மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 14.08.2024 காலை 11 மணியளவில் சூரம்பட்டி நால்ரோடு அருகில் உள்ள மதிமுக அலுவல அரங்கில் நடைபெற்றது.



இக்கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களின் தலைமையில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் செல்வராசு, மாவட்டச் செயலாளர் எழிலன், அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, அறிவியல் மன்றப் பொறுப்பாளர் சிவக்குமார், மணிமேகலை, ஜோதி, திருமுருகன், கௌதம், கோபிநாத், விக்னேஸ், இரவி, அழகு, குமார், பிரபு, முருகேசன், ரங்கம்பாளையம் பிரபு, முகுந்தன், அய்யப்பன், நல்லதம்பி, சுரேஷ், விஜய்ரத்தினம், பழனிசாமி, சத்திய மூர்த்தி உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

இதில் மாணவர்களிடையே நிலவிவரும் போதைப் பழக்கத்திற்கு எதிரான பரப்புரையை மேற்கொள்வதெனவும், ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான நடவடிக்கைகள், மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டம் உள்ளிட்டவைகளை இயற்றக்கோரி அரசை வலியுறுத்துவதோடு அதற்கான பரப்புரையை மக்களிடையே கொண்டு செல்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஈரோடு தெற்கு மாவட்ட ஆலோசகராக இருந்து மறைந்த பெரியார் விருதாளர் இனியன் பத்மநாபன் படத்தைக் கழகத் தலைவர் திறந்து வைத்தார்.

மாவட்ட நிர்வாகப் பொறுப்புகளில் மாவட்ட துணைத் தலைவராக கிருஷ்ணன் அவர்களும் மாவட்ட துணைச் செயலாளராக செந்தில் அவர்களும் புதிதாக நியமிக்கப்பட்டனர். நிறைவாக மணிமேகலை நன்றி கூறினார்.

**கடலூர்:** கடலூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 17-08-2024 அன்று சிதம்பரத்தில் உள்ள ABN மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமைத் தாங்கினார்.



பெரியார் விழுது திராவிட மகிழன் கடவுள் மறுப்பு வாசகம் கூறக் கூட்டம் தொடங்கியது. கடலூர் மாவட்டக் கழக அமைப்பாளர் அ.மதன்குமார் வரவேற்புரையாற்றினார்.

அடுத்ததாக கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தற்போதைய அரசியல் சூழலில் நாம் எப்படி செயல்படுவது, கடலூர் மாவட்டக் கழகத்தின் எதிர்கால செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து விரிவாகப் பேசினார்.

மேலும் செ.பிரகாசு, தாமரை, சிவக்குமார், நா.கௌஞ்சி, அறிவழகன், சதிஷ் ஆகியோர் கடலூர் மாவட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயல்பாடுகளை முன்வைத்துப் பேசினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். அவர் பேசுகையில்:- தமிழ்நாட்டில் தற்போது மாணவர் - இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் கலாச்சாரம் அதிகரித்து வருவது வேதனையளிக்கிறது. ஜாதி, மதவாதச் சிந்தனைகளைப் போலவே போதைப்பொருள் கலாச்சாரமும் மிகவும் ஆபத்தானது. இதுகுறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கழக சார்பில் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பேசினார்.

மேலும் மதன்குமார் மாவட்ட அமைப்பாளராகத் தொடர்வார் என்றும் அறிவித்தார்.

இதில் நிவாஸ், அரவிந்தன், ரூபன், இனியதர்ஷன், புகழேந்தி, தீபக், திருமூர்த்தி, தென்னரசு, இளையராஜா ஆகியோர் பங்கேற்றனர். மேலும் கழக ஆதரவாளர்களான அசோக், கிருபா, ஆலப்பாக்கம் செந்தில் கழகத் தலைவருக்கு பயனாடை அணிவித்து மகிழ்ந்தனர்.

கலந்துரையாடல் கூட்டம் நடத்துவதற்காக திருமண மண்டபத்தை வழங்கி உதவிப்புரிந்த பதுருதின் அவர்களுக்குக் கழகத் தலைவர் பயனாடை அணிவித்துப் பாராட்டினார்.

**திருச்சி:** திருச்சி மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 15.08.2024 அன்று மாலை 5 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் முன்னிலையிலும் நடைபெற்றது.



கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் போதைப்பொருள் கலாச்சாரத்தை எதிர்த்து விழிப்புணர்வுப் பயணம், கழகத்தின் எதிர்கால செயல்பாடுகள் குறித்து விரிவாகப் பேசினார்கள்..

நிறைவாக அல்லித்துறை கோகுல்ராஜ், சுரேஷ் கண்ணன், தாயனூர் வி. அறிவழகன், நாச்சிக்குறிச்சி சி. நிரஞ்சன், ஆலம்பட்டி புதூர் க. ஆனந்தராஜ் உள்ளிட்ட தோழர்கள் தங்களைக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இதில் திருச்சி மாவட்டத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## தோழர் ஆனைமுத்து நூற்றாண்டு வாசகர் வட்டம் - பேராசிரியர் நாகநாதன் பங்கேற்பு




சென்னை: பெரியாரியல் பேரறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு 23ஆவது நிமிர்வோம் வாசகர் வட்ட சந்திப்பு 17.08.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு முன்னதாகத் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்துவைத்தார்.

கூட்டத்திற்கு திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் இராஜேசு தலைமைத் தாங்கினார். திருப்பூர் பிரசாந்த் வரவேற்புரையாற்றினார். அழகிரி முன்னிலை வகித்தார்.

அதனைத் தொடர்ந்து மேனாள் திட்டக்குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன், வகுப்புரிமைப் போரில் தோழர் ஆனைமுத்து என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

மேலும் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், ஜாதிவாரி கணக்கெடுப்பு; தேவையும் திசைத்திருப்பலும் என்ற தலைப்பிலும், தோழர் திருப்பூர் மகிழவன், உள் ஒதுக்கீடு; அவசியமும் அரசியலும் என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள்.

நிறைவாகத் தோழர் எழிலரசன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. கூட்டத்தை நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பிரகாசு ஒருங்கிணைத்தார்.

இதில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன், சா.குப்பன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், வட சென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 23, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran